**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.46/2024

Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : காளீஸ்வரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of October 2024.

21.10.2024

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எனது கணவர் அசா.1 கோவிந்தராஜ் 01.09.2023ம் தேதி குமாரக்குறிச்சியில் நடைபெற்ற நாடகத்தை பார்ப்பதற்காக சென்றிருந்தார். 1ம் எதிரி ரமேஷ், 2ம் எதிரி அருண், 3ம் எதிரி குமார் மற்றும் 4ம் எதிரி செந்தில்குமார் ஆகியோர் குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்ததில் எனது கணவர் அசா.1யை அடித்துவிட்டு சென்றதாக எனது ஊரை சேர்ந்தவர்கள் சுரேஷ் மற்றும் சண்முகம் ஆகியோர் காயம்பட்டு இருந்த எனது கணவர் அசா.1யை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். பின்னர் எனது கணவர் அசா.1யை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுபோய் சேர்த்தோம்.

2) பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது கணவர் அசா.1யை இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். எனது கணவர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது அங்கு முதுகுளத்தூர் காவல் நிலைய போலிசார் வந்து புகார் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சண்டையை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சுரேஷ், சண்முகமும் காயம்பட்ட எனது கணவர் அ.சா.1 யை வீட்டிற்கு அழைத்துவந்ததை போலிசாரிடம் கூறினேனா என்றால் கூறவில்லை. எனது கணவர் அ.சா.1 கூறியபிறகு தான் எனக்கு சம்பவத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.46/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : சுரேஷ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of October 2024.

21.10.2024

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். 01.09.2023ம் தேதி குமாரக்குறிச்சியில் நடைபெற்ற நாடகத்தை பார்ப்பதற்காக நான், பூமிநாதனும் சென்றிருந்தார். எங்களுக்கு பின்னால் ரமேஷ்பாண்டியன் பைக்கில் அமர்ந்துகொண்டு தள்ளுங்கள் என்று கூறினார். அதில் எங்களுக்கும் ரமேஷ்பாண்டியனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ரமேஷ்பாண்டியன் இருங்கடா வரேன் என்று சொல்லிவிட்டு போனார். பின்னர் நானும் பூமிநாதனும் சென்றுவிட்டோம்.

2) குமாராக்குறிச்சி பேருந்தி நிறுத்தம் அருகே வரும்போது சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது 1 முதல் 4 எதிரிகள் அந்த இடத்தை விட்டு ஓடினார்கள். அங்கு அ.சா.1 கோவிந்தராஜ் விழுந்து கிடந்தார். நானும் பூமிநாதனும் அ.சா.1யை தூக்கிச்சென்று அவரது மனைவியிடம் ஒப்படைத்தோம். அ.சா.1 கோவிந்தராஜ்க்கு கையில் உள்ள மோதிர விரல் ஒடிந்து காணப்பட்டது. அ.சா.1ன் முதுகு முழுவதும் காயம் ஏற்பட்டது. முகத்தில் ரத்தக்காயம் காணப்பட்டது. அங்கிருந்து அ.சா.1யை

சிகிச்சைக்காக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுபோய் அ.சா.1 ன் மனைவி சேர்த்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) அ.சா.1 கோவிந்தராஜ், நான் மற்றும் பூமிநாதன் ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்துதான் குமாரக்குறிச்சிக்கு நாடகம் பார்க்க சென்றோம் என்றால் இல்லை நானும் பூமிநாதனும் மட்டும் தான் சென்றோம். குமாரக்குறிச்சியில் நடந்த சம்பவத்தின்போது எதிரி ரமேஷ்பாண்டியனின் கழுத்தில் இருந்த தங்க செயினை அறுத்துவிட்டு நாங்கள் தப்பித்துவிட்டோம் என்றால் சரியல்ல. குமாராக்குறிச்சி பேருந்து நிறுத்ததில் நடந்த சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.1 யை தூக்கிச்சென்று அவரது மனைவியிடம் ஒப்படைத்தோம் என்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேன் என்றால் கூறினேன்.

2) போலிசார் என்னை ஊரில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். குமாராக்குறிச்சி நடந்த சம்பவத்தில் எதிரி ரமேஷ்பாண்டியனின் கழுத்தில் இருந்த தங்க செயினை அறுத்துவிட்டு சென்றதற்காக போலிசார் எங்கள் மீது வழக்கு போடுவார்கள் என்று தெரிந்து நாங்கள் அ.சா.1 கோவிந்தராஜ்க்கு நாங்களே காயத்தை ஏற்படுத்தி பொய்யாக புகார் கொடுக்க வைத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் குமாரக்குறிச்சியில் இருந்து ஊருக்கு செல்லும்போது சுமார் 12.00 முதல் 12.30 மணி இருக்கும்.

3) அ.சா.1 கோவிந்தராஜ் குமாரக்குறிச்சியில் இருந்து எந்த வாகனத்தில் எப்படி வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடம் குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்தம் தான் என்றால் சரிதான். நாங்கள் எல்லோரும் உறவினராக இருந்தாலும் அ.சா.1 கோவிந்தராஜ்யை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் அ.சா.1 கோவிந்தராஜ் மயக்கநிலையில் இல்லை என்றாலும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் எங்களால் திட்டமிட்டு ஏற்படுத்திக்கெண்டது என்றால் சரியல்ல.

4) குமாரக்குறிசிச்சியில் சம்பவம் நடக்கும்போது போலிசார் காவலில் இருந்தனர் என்றால் சரிதான். அப்போதே சண்டையில் காவலர்கள் தலையிட்டு 1ம் எதிரி ரமேஷ்பாண்டியனின் கழுத்தில் செயினை காணவில்லை என்பது எங்களுக்கும் காவலர்களுக்கும் தெரியும் என்றால் சரிதான். அசா.1, நான் மற்றும் பூமிநாதன்

ஆகியோர் திட்டமிட்டு எங்கள் மீது உள்ள வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் அளித்து அதற்கு அதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் சொல்லிய சாட்சி உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும், செயினை எடுத்து அதில் கிடைக்கும் லாபத்தில் பயன்பெறுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) எங்கள் ஊர் சடையனேரியை சேர்ந்த செந்தில் என்பவரின் மனைவி பரிமளா ஆவார். பரிமளா என்பவருக்கு தான் எதிரிகளின் பெயரை தெரியும் எதிரிகளின் பெயரை தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் நிரபராதிகள் அவர்களுக்கு எதிராக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.